திரு. ஜே, எஸ். இராசு : தலைவர் அவர்களே, பாசன வாரியம் அமைக்கப்படும்பொழுது வறட்சியால் காலங்காலமாக பாதிக்கப்பட்ட பகுதயிலிருந்து பொதுமக்கள் பிரதிநிதிகளையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்கின்ற யோசனை அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கூடுமானவரை அந்த யோசனை அரசின் கருத்திலே இருக்கிறது.

சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனிலுள்ள புராதனக் கால்வாய்களை நவீன மயமாக்கும் திட்டம்,

*வினா எண். 768—திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனில் உள்ள புராதன வாய்க்கால்களை காவிரி டெல்டா நவீனமயமாக்கப்படும் திட்டத்தை நீட்டி நவீனமயமாக்க ஒரு திட்டத்தை தலைமை பொறியாளர் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறாரா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) ரூ. 18.04 கோடி செலவில் கீழ் கொள்ளிடம் அணைக்கட்டு திட்டம் மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு திட்டங்களின் கீழ் வரும் வாய்க்கால்களை நவீனப்படுத்துவதற்கான திட்டச் சுருக்கம் (Project Brief) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. வி. சுவாமிநாதன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தரைமேல் ஓடுகிற வெள்ளத் தண்ணீரில் 55 சதவீதம் சிதம்பரம் பொதுப் பணித்துறை டிவிஷன் வழியாகச் செல்கிறது. சேத்தியாத்தோப்பு லோயர் அணைக்கட்டுக்குக் கீழே உள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் எல்லாம் பல நூற்றாண்டுக்காலமாக சரியாக சீரமைக்கப்படாததால் குறுகி, மேடிட்டு வெள்ளம் வந்தாலும் பாதிக்கப்படுகிற நிலையும் வறட்சி வந்தாலும் பாதிக்கப்படுகிற நிலையும் இருப்பதால் செலவில் சிக்கனம் ஆவதையும் பலன் அதிகம் தரக்கூடியதையும் கருதி டீப் அன்ட் டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் என்ற முறையிலே ஆய்வு செய்யச் சொல்லி விரைவிலே எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது ப்ராஜக்ட் பிரீப்தான். டீட்டெய்ல்ட் இன்வெஸ்டிகேஷனுக்கு அனுப்ப அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 2, 3 சந்தர்ப்பங்களில் தலைமைப் பொறியாளரையும் என்னையும் சந்தித்துப் பேசி

விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள் அந்தத் திட்டத்தின் அவசியம் கருதியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சியைக் கருதியும் திட்டத்தை விரைவிலே எடுத்துக்கொள்ள அரசு நிச்சயமாக ஆணையிடும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, காவிரி டெல்டாவை நவீனப்படுத்துகின்ற திட்டத்தில் அந்த காவிரி டெல்டாவினுடைய சீப் கன்ட்ரோல், அதைக் கட்டுப்படுத்துகின்ற நிலையம் சிதம்பரத்திலே இருக்கிறது, தெற்கு ராஜன் வாய்க்காலின் தண்ணீர்க் கட்டுப்பாட்டு நிலையமும்கூட சிதம்பரத்தில் இருப்பதால் இந்த காவிரி டெல்டாவை சீரமைப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே அதை மாற்றி சீர்காழிக்கோ மாயவரத்திற்கோ கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கட்டுப்பாட்டு நிலையம் சிதம்பரத்திலே முறையாக செயல்படுகிறதா இல்லையா என்று தான் பரிசீலிக்க வேண்டுமே தவிர சிதம்பரத்திலிருப்பதை சீர்காழிக்கோ அல்லது மாயவரத்திற்கோ கொண்டுபோவது பற்றியல்ல. இப்போது அது சரியாக இருக்கிறது. கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டு திட்டம், மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் வரும் வாய்க்கால்களை நவீனப் படுத்துவதற்காக உள்ள திட்டம் பற்றியது. ஏற்கெனவே அதற்கான புராஜக்ட் ட்ரிப் 18 கோடி ரூபாய் செலவிலே உள்ள திட்டச் சுருக்கத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அதிலே இந்தப் பிரச்சினை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 769 மற்றும் 770 ஆகியவை ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

தமிழகத்தில் நிறுவப்படவுள்ள காகித ஆலைகள்.

*வினா எண் 769—திரு. செ. செம்மலை, திரு. ஏ. எம். சேதுராமன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. த. வேணுகோபால், திரு. இல. பலராமன், மற்றும் திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்பு சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் காகித ஆலைகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த இடங்களில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது ?